18th February 1961]

வில்லை என்று அரசாங்கம் கருதுகிறதா? அல்லது அரசாங் கத்தைச் சேர்ந்தவர்கள் கருதுகிறார்களா? அப்படிக் கருதினால் அதற்குக் காரணம் என்ன என்பதைத் தருவார்களா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: அப்படி அரசாங்கம் கருதவில்லை. தற்பொழுது அதை நடவடிக்கையில் கொண்டு வரவேண்டும் என்று தான் அரசாங்கமும் கார்ப்ப ரேஷனும் கருதுகிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR: சார், அரசாங்க அமைப்பு முறையில் ஒரு ஸ்தாபனம் மற்றொரு ஸ்தாபனத்திலிருந்து பெற வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் போது காவடி எடுக்கிறது என்றும் அடிபணிகிறது என்றும் சொல்லுகிறார்களே அப்படி என்ன செய்கிறார்கள்? அப்படி கொடுத்தப் பணத்தை வாங்கி செலவு செய்கிறார்களா கார்ப்ப ரேஷன்?

(No answer.)

SRI K. VINAYAKAM: Sir, may I know whether a list of priority of the over-bridges to be constructed in the City of Madras has been drawn up by the Government and given to the Corporation of Madras and if so, in that priority list where does the Kodambakkam over-bridge stand?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: This question does not arise from the original question. With regard to qcestion of grant and loan, I have given the answer.

Baby food

* 369 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to start a baby food facory?

THE HON. SRI R. VENKATARAMAN: The proposal is still under investigation.

SRI J. MATHA GOWDER: ஸார், கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சென்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதை ஒத்தி வைத்து விட்டு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்க முயற்சிக்கிறார்களா? அப்படிப்பட்ட முயற்சி எந்த அளவில் இருக்கிறது? அப்படி மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது சேர்ப்பதாக இருந்தால் அதை அந்த திட்ட காலத்தின் ஆரம்பத்திலேயே சேர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா? மூன்றாவது ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்திலேயே இந்த உற்பத்தியைச் செய்ய தொடங்கு வதற்கு இந்தச் சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: "Counting the chickens before they are hatched" என்று ஆங்கிலத்தில் சொல்லு வார்கள். அதுபோல் இருக்கிறது இந்தக் கேள்வி. இது

பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லும்போது அதில் சர்க்காருடைய முயற்சிக்கு குறைவு இல்லை. வெளி நாட்டு உதவி எவ்வளவு கிடக்கிறதோ அதைப் பொறுத்து இருக்கிறது சர்க்காருடைய முயற்சி. அதற்கு வெளி நாட்டிலிருந்து வரக்கூடிய உதவியைக் கொண்டுதான் நிறைவேற்ற முடியும். அது இல்லாமல் ஒன்றும் செய்வதற்கு இல்லை. முதலில் "டேனிஷ் கோவாபரேஷன்" எங்களுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். அப்பொழுது எல்லா திட்டங்களையும் செய்ய தயாராக இருந்தோம். பிறகு அவர்கள் பின் வாங்கி விட்டார்கள். அதனால் அவைகளை இப்பொழுது கொண்டு வர முடியவில்லை. அதனால் இப்பொழுது முடியும் என்று சொல்வதற்கு இல்லை.

Oil-mongers' Association, Pazhampettai

* 370 *Q.*—**Sri M. P. SARATHI :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், பழம்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தில் சமீபத்தில் பூட்டை உடைத்துத் திருட்டு நடந்ததாக போலீசாரிடம் புகார் வந்ததா ?

(இ) போலீசாரின் புலன் விசாரனை எந்த நிலையில் உள்ளது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The complaint was made in March 1959.

(*b*) The case was treated as false, after a thorough investigation, and the person who gave the false complaint was appropriately punished by the competent courts.

Sri M. P. SARATHI : சார், போலீசார் விசாரனையில் அந்தப் புகார் செய்தவர்தான் அந்தக் குற்றத்தைச் செய்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்களா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதையேதான் நான் பதிலும் சொன்னேன். புகார் செய்தவரே பணத்தை எடுத்துக் கொண்டு விட்டு புகார் செய்திருக்கிறார் என்று தெரிய வந்தது. அதன்பேரில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த வகையில் அவருக்கு ஐம்பது ரூபாய் அபராதம் ; அதைக் கட்டத் தவறினால் ஆறு மாத சிறை தண்டனை என்று தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

Adulteration

* 371 *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் உணவுப் பொருள் வர்த்தகத்தில் கலப்படமிருக்கிறதா எனப் பரிசீலனை செய்யப்படுகிறதா ?